1987 ஏப்ரல் 3]

தஞ்சை மாவட்டம் குத்தாலம் அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தல்.

267—(*வினா எண்,7551) திரு. பாப்பா சுப்பிரமணியன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலத்தில் உள்ள அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தி, அதிக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம், குத்தாலம் தொகுதியினுடைய தலைநகராக விளங்குகிற காரணத்தாலும், 350-க்கு மேற்பட்ட புற நோயாளிகள் மருத்துவவசதி பெறுவதற்காக அந்த மருத்துவ மனைக்கு வருகின்ற காரணத்தாலும், மேலும் 150-க்கும் மேற் பட்ட குக்கிராமங்கள் குத்தாலம் பகுதியைச் சுற்றி இருப்பதா லும், புரட்சித்தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் அரசு குக்கிராமங்களை நகரமாக மாற்றவேண்டுமென்ற சீரிய நோக்கத் தோடு செயல்பட்டு வருகின்ற காரணத்தாலும், அந்தப் பகுதி மக்களுடைய இப்படிப்பட்ட சங்கடங்களைப் போக்கவேண்டு மென்ற நோக்கத்தோடும் வருகிற ஆண்டுகளிலேயாவது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களின் அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி நிர்வாகச் சிக்கல் இருந்தாலும் குத்தாலத்திற்கு என்று ஒதுக்கீடு செய்து முன்னுரிமை தந்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்த ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரம் சரியாக இருந்தால் இதைப்பற்றி அரசு பரிசீலிக்கலாம்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையிலே இரத்தப் பரி சோதனைப் பிரிவு, மற்றும் எக்ஸ்ரே பிரிவு போன்றவைகள் இல்லை. அதோடு அந்த மருத்துவ மனையில் தண்ணீர் வசதி இல்லை. அதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலேயாவது தனி ஒதுக்கீடு செய்து அந்த மருத்துவமனையை முன்னேற்றம் செய்து தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனைக்குத் தண்ணீர் வசதி இல்லை என்று சொன்னார்கள். அதை அரசு கவனிக்கும்.